www.tamilarangam.net




இதய அஞ்சலி...


# எங்கள் கலைச்செல்வன்

சமத்துவத்தை சுவாசித்த சாத்வீகன்
மனித நேயத்தை நேசித்த ஒரு மானிடன்
புகலிட மண்ணிலும் புகழுடம்பான புரட்சிக்குரியவன்

– சுட்டுவிரல்

www.tamilarangam.net

# மாற்றில் மாற்றானவன்



*இலக்கியத்திற்கு இடம் சேர்த்தவன்*
*இயல்பியலுக்கும் இணங்கி வாழ்ந்தவன்*
*கலைஞனுக்கு முகம் கொடுத்தவன்*
*காற்றோடு கலந்துவிட்டான்.*

பொதுவான வாழ்வியல் கருத்துகளுக்கு மாறான, மாற்றுக் கருத்துக்களுக்கான சார்புநிலைவாதிகளில் முன்னோடியான நண்பர் கலைச்செல்வன், அந்த மாறியலிலும் மாறுபட்ட ஒருவராக அனைத்தையும் அவதானிக்கும் அஷ்டாவதானியாக இறுதிவரை இயங்கிக்கொண்டே இருந்திருக்கிறார்.

நண்பர் கலைச்செல்வனின் மறைவு மாற்றுக்கருத்துகளுக்கான கருத்தியலுக்கு ஒரு பாரியஇழப்பு என்பதில் எதுவித எதிர்க்கருத்தும் இருக்கமுடியாது.

அவர் மறைவால் அவதியுறும் அனைவருடனும் நாமும் இணைந்துகொள்கிறோம்.

*நிம்மி & கோவை நந்தன்*
*பிரான்ஸ், 13 மார்ச் 2005*

www.tamilarangam.net

# கண்ணீர் அஞ்சலி

மனதை உலுக்கும் மரணச் செய்தியாய் நண்பன் கலைச்செல்வன் எழுதப்பட்டுவிட்டான். 45 வயதேயான, வாழ்வின் நடுப் பகுதியைத் தொட்டிருந்தபோது இவன் காவுகொள்ளப்பட்டுவிட்டான். சிரித்த முகம், கலகலப்பான பேச்சு, அரவணைப்பு எல்லாம் அவனது குறும்தாடியை இழக்க மறுத்த முகத்தையும் தாண்டி வந்து அவனது தோற்றத்தை எம் நினைவில் எழுதிச்செல்லும்.

புலம்பெயர் வாழ்வின் ஆரம்பகாலங்களில் அதாவது 80 களின் ஆரம்பங்களிலிருந்தே இலக்கியம் அரசியல் என பணியாற்றத் தொடங்கியவர்களில் அவனும் ஒருவன். ஒரு கவிஞனாக நடிகனாக விமர்சகனாக செயற்பாட்டாளனாக அவன் பல முகங்களைக் காட்டியவன். எக்சில் சஞ்சிகையின் ஆரம்பகாலத் தோற்றத்துக்குக் காரணமானவர்களில் ஒருவனாக இருந்து பின் உயிர்நிழல் சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவனாக தனது உழைப்பைத் தொடர்ந்துகொண்டேயிருந்தான். பாரிஸில் வெளிவந்த முழுநீளத் திரைப்படமான 'முகம்' படத்தில் முக்கிய பாத்திரத்தில் வந்து தன்னில் நடிப்பாற்றல் புதைந்திருப்பதை வெளிப்படுத்திக் காட்டினான். புகலிடத்தின் இலக்கியச் சந்திப்புகளில் ஆர்வமுடன் காணப்பட்ட அவன் பரிசில் சந்திப்புகளை நடத்துவதிலும் முன்னின்றான்.

## கலைச்செல்வனின் மரணச்செய்தி




28.03.1960 - 05.03.2005


தமது வலுவுக்கு எட்டியளவு தமது உழைப்பையெல்லாம் கரைத்து அவனும் அவன் துணைவி லக்சுமியும் உயிர்நிழல் சஞ்சிகையையும் சில வெளியீடுகளையும் வெளிக்கொணர்ந்தார்கள். புலம்பெயர் இலக்கியத்தின் தோற்றத்தில் பன்முகக் கருத்துகளுடன் எழுத்தின் வலிமையை நிலைநாட்டிவந்த சஞ்சிகைகளில் எக்சில் உயிர்நிழல் என்பவற்றுக்கும் முக்கிய பங்குண்டு. விடாமுயற்சியோடு சொந்த உழைப்பில் அண்மைக்காலம்வரை உயிர்நிழல் சஞ்சிகையைக் கொண்டுவந்து தனது பாதையைத் தொடர்ந்துவிட்டு இன்று எம்மைவிட்டு நிரந்தரமாய் விடைபெற்றுவிட்டான்.

நம்பமுடியவில்லை. எம் நினைவில் அவன் மரணத்தை இருத்தமுடியவில்லைத்தான். ஆனாலும் நம்பித்தான் ஆகவேண்டும் என்றானபோது எழுகிறதே வலி, இங்கு அவன் எம்முடனே வாழ்ந்துகொள்கிறான். திரட்சியான அனுபவங்களுடனும் பின்னணிபாடா அரசியலுடனும் அவன் எம்மில் இணைந்துகொண்டதால் மெல்ல நெளிகிறதே ஒரு கனம், இங்கு அவன் எம்முடனே வாழ்ந்து கொள்கிறான். அவன் வாழ்ந்துகொள்வான் எம்முடன். துணைவியாக ஒரு நண்பியாக தோழியாக அவனுடன் வாழ்ந்த லக்சுமிக்கும் மகன் கபிலனுக்கும், அவனது தாய்க்கும் சகோதரங்களுக்கும் மற்றும் உறவினர் நண்பர்களுக்கும் எமது கரங்களின் மெல்லப் பற்றுதலாய்... அவர்தம் துயருள் எம் இணைவாய்...

துயருறு பொழுதுடன் நாம்
சுவிஸ் நண்பர்கள்



www.tamilarangam.net



# கலைச்செல்வனின் என் நினைவுகள்.........

செல்வங்களில் பெரும்
செல்வங்களாம்
கலைச்செல்வங்கள்
அக் கலைச் செல்வங்களை காணா
தேடி, ஓடி, நாடி
ரசித்த நாட்களில்
கலைகளின் செல்வன்
உன்னை கண்டேன்

உன்னில் உன் உள்ளத்தில்
உருகி கொண்ட
ஒரு அன்பை கண்டேன்
என்னை கண்ட போதெல்லாம்
முகமலர்ந்து கைகுலுக்கி, கைகூப்பி
கவியே, கவிக்குயிலென
செல்லமாக சொல்லி செல்வாய்
நானும் செல்லமாக சிரித்து செல்வேன்
இலக்கிய விமர்சனங்களுடனும்
உன்னை சந்தித்தேன்
சிலவேளை தட்டிக் கொடுப்பாய்
சிலவேளை முட்டியும் கொள்வாய்
உன் வீண்பு வாதங்களாலும்
நொந்து கொண்டு
வந்து கண்ட
கவிதை பல கண்டு கழிப்புற்றேன்
இவையே எனக்கு உன்னில்
பிடித்தவை

உனக்கு பிடிக்காதவைகளை
உடனே உரைத்திடுவாய்
எனக்கு பிடிக்காதவைகளை
உன்னிடம் மோதிடுவேன்
அவையறிவு சம்பந்தமானவை
அவை அன்பு சம்பந்தமானவை
அறிந்து அன்பு கொண்டேன்

என்றும்
சிரிக்க தெரிந்தவனே
சிரித்து கொண்டேயிருப்பாய்
உயிர்களில் சிரிக்க தெரிந்த
உயிர் மனித உயிர் என்பதை
உன்னில் உறுதிப்படுத்தினவனே

மனித மனங்களை நேசித்தவனே
மனிதர்களும் மனிதமும் மண்ணில்
வாழ எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும்
நடிப்பிலும் உன்னை காட்டியவனே

இன்று! உன் மரண செய்தி கேட்டு
மனமுடைந்து, மனம்நொந்தேன்
எதற்கு,மரணம் உன்னை தேடி வந்தது
இதற்கு பெயரா?
இந்த இழிந்த வாழ்வு
அழிந்த வாழ்வு விழிந்தேன்

உன்னோடு பல விதமாய்
கருத்து மோத
கட்டி வைத்தேன் பல கருவை
காத்திருந்தேன்
உன் வரவை
இவையெல்லாம் மூடிவிட்டு
ஓடிவிட்டாய் இந்த
பொல்லாத உலகை விட்டு

உன்னை உன் எண்ணத்தை
தெரிந்தவர் புரிந்தவர் யாருமில்லையோ
அறியேன், தெரியேன்
எதை தெரிந்தார்களே
எதை புரிந்தார்களோ
உன் நண்பர்கள் அன்பர்கள்
அதையும் அறியேன் யான்
ஒன்று மட்டும் புரிந்தேன்
உன் சிரிப்பை மட்டும் புரிந்தேன்
ஏனெனில் சிரிக்க மட்டுமே
பிறந்தவர்கள் யாம்
சிரித்துவிட்டு போகின்றாய்
சிந்திக்கின்றேன்
சிந்துகின்றேன்
ஒரு துளி கண்ணீர் உனக்காக
இதுவே எமது நிரந்தரப் பயணம்
நினைக்கின்றேன்

- ஜெயா பத்மநாதன் -
பிரான்ஸ்


www.tamilarangam.net

கனகசிங்கம் ஆச்சிப்பிள்ளை

# கலைச்செல்வன்

உயிரின் நிழலாய்...

28.03.1960 - 05.03.2005



நெஞ்சிருத்தி
நெஞ்சில் உன் முகமிருத்தி
முகத்தில் உன்
முத்தழகுச் சிரிப்பிருத்தி
சிரிப்பில் உன்
சித்தத்தின் வலுவிருத்தி
உனை நினைக்க........
நினைவெரிதல் கொடுமையடா
காலத்தொட்டிலில்
கண்ணுறங்கும் கண்மணியே
ஆராரோ ஆரிரரோ

அஞ்சு தலைநாகம்
அடைகாக்கும் தாளையிலே
அஞ்சாமல் பூப்பறித்த
அருச்சுணரே எங்கள் அய்யா


ஆராரோ ஆரிரரோ
கண்மணியே கண்வளராய்

பச்சை இலுப்பை வெட்டி
பால் வடியத் தொட்டில்கட்டி
எங்கள் அய்யாவுக்கு
தொட்டிலுமோ பொன்னாலே
தொடு கயிறோ முத்தாலே
ஆராரோ ஆரிரரோ
கண்மணியே கண்வளராய்

இரா.றஜீன்குமார், ராகவன், ஜெகாதரன்
பேர்லின்

www.tamilarangam.net

# மாற்றில் மாற்றானவன்



*இலக்கியத்திற்கு இடம் சேர்த்தவன்*
*இயல்பியலுக்கும் இணங்கி வாழ்ந்தவன்*
*கலைஞனுக்கு முகம் கொடுத்தவன்*
*காற்றோடு கலந்துவிட்டான்.*

பொதுவான வாழ்வியல் கருத்துகளுக்கு மாறான, மாற்றுக் கருத்துக்களுக்கான சார்புநிலைவாதிகளில் முன்னோடியான நண்பர் கலைச்செல்வன், அந்த மாறியலிலும் மாறுபட்ட ஒருவராக அனைத்தையும் அவதானிக்கும் அஷ்டாவதானியாக இறுதிவரை இயங்கிக்கொண்டே இருந்திருக்கிறார்.

நண்பர் கலைச்செல்வனின் மறைவு மாற்றுக்கருத்துகளுக்கான கருத்தியலுக்கு ஒரு பாரியஇழப்பு என்பதில் எதுவித எதிர்க்கருத்தும் இருக்கமுடியாது.

அவர் மறைவால் அவதியுறும் அனைவருடனும் நாமும் இணைந்துகொள்கிறோம்.

*நிம்மி & கோவை நந்தன்*
*பிரான்ஸ், 13 மார்ச் 2005*

# உயிரின் நிழலாய்



அன்னை மடியில்
28-03-1960

மக்கள் மனதில்
05-03-2005

## தோழர். கலைச்செல்வன்

காலஞ்சென்ற எமது அன்புத் தோழர் கலைச்செல்வன் அவர்கள் 1983ற்குப் பின், புலம்பெயர்ந்து சமூகத்தின் நெருக்கடிகளுடன் தம்மைப் பிணைத்துக்கொண்டு, சமகால வரலாற்றின் குறியீடாக எம்மோடு வாழ்ந்தவர். இலக்கிய வட்டம், பெண்கள் சந்திப்பு, புலம் பெயர்ந்தவர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள், கலைச் செயற்பாடுகள், ஜனநாயகம், மனித உரிமை, மற்றும் சகல அடக்கு முறைகளுக்கும் எதிரான உந்துதலுடன் வாழ்ந்து எம்மை விட்டு மறைந்தவர்.

முகம், உயிர்நிழல் ஆகிய கலைப்படைப்புகளினூடாக, தனது ஆன்ம உணர்வுகளை வெளிப்படுத்திய கலைச்செல்வன் அவர்களின் திடீர் மறைவு, எம்மை பெரும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. கலைஞனாக, இலக்கிய வாதியாக, சமூகவியலாளனாக, தொழிலாளியாக, புலம்பெயர்ந்த மனிதர்களின் துயரம் நிறைந்த நெருக்கடிகளுடன் தன்னைத் தொடர்புபடுத்தி வாழ்ந்தவர்.

பிரான்சில் தயாரிக்கப்பட்ட முகம் திரைப்படத்தில் என்றென்றும் மனதில் நிற்கும் அழுத்தமான முத்திரையைப் பதித்திருந்தார். உயிர்நிழல் ஊடாக, மானிடர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள், தமிழ் சமுதாயத்தினுள் நிலவும் முரண்பாடுகள், தேசிய ஒடுக்குமுறைகள் தொடர்பான புதிய கேள்விகளை, தமது சகாக்களுடன் சேர்ந்து எழுப்பியிருந்தார். மாக்சியத்தின்பால் அதீத நம்பிக்கை கொண்ட இவர், பின் நவீனத்துவம், அமைப்பியல் பற்றியும் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

பாரிசில் உயிர்த்துடிப்புடன் செயற்பட்ட சில உன்னதமான மனிதர்களை அண்மைக்காலங்களில் நாம் இழந்திருக்கின்றோம். சபாலிங்கம் அவர்கள் பாசிசத்திற்குப் பலியானார். உமாகாந்தன் அவர்கள் வாழ்வியல் சமூக நெருக்கடிகளில் போராடி, குறைந்த வயதிலேயே மறைந்தார். தற்போது நாம், தோழர் கலைச்செல்வன் அவர்களை இழந்திருக்கின்றோம். அவருடன் சம காலத்தில் ஒன்றாக வாழ்ந்த தோழர்கள், நண்பர்கள் ஆகிய எங்களுக்கு அவருடைய இழப்பு, பாரிய வெறுமையைத் தோற்றுவித்துள்ளது.

அவரின் பிரிவால் வாடும், அவரின் மனைவி, மற்றும் குடும்பத்தார், நண்பர்கள், தோழர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தோழர் கலைச்செல்வன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா
(EPRLF-P)

www.tamilarangam.net

# உயிரின் நிழலாய்



அன்னை மடியில்
28-03-1960

மக்கள் மனதில்
05-03-2005

## தோழர். கலைச்செல்வன்

காலஞ்சென்ற எமது அன்புத் தோழர் கலைச்செல்வன் அவர்கள் 1983ற்குப் பின், புலம்பெயர்ந்து சமூகத்தின் நெருக்கடிகளுடன் தம்மைப் பிணைத்துக்கொண்டு, சமகால வரலாற்றின் குறியீடாக எம்மோடு வாழ்ந்தவர். இலக்கிய வட்டம், பெண்கள் சந்திப்பு, புலம் பெயர்ந்தவர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள், கலைச் செயற்பாடுகள், ஜனநாயகம், மனித உரிமை, மற்றும் சகல அடக்கு முறைகளுக்கும் எதிரான உந்துதலுடன் வாழ்ந்து எம்மை விட்டு மறைந்தவர்.

முகம், உயிர்நிழல் ஆகிய கலைப்படைப்புகளினூடாக, தனது ஆன்ம உணர்வுகளை வெளிப்படுத்திய கலைச்செல்வன் அவர்களின் திடீர் மறைவு, எம்மை பெரும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. கலைஞனாக, இலக்கிய வாதியாக, சமூகவியலாளனாக, தொழிலாளியாக, புலம்பெயர்ந்த மனிதர்களின் துயரம் நிறைந்த நெருக்கடிகளுடன் தன்னைத் தொடர்புபடுத்தி வாழ்ந்தவர்.

பிரான்சில் தயாரிக்கப்பட்ட முகம் திரைப்படத்தில் என்றென்றும் மனதில் நிற்கும் அழுத்தமான முத்திரையைப் பதித்திருந்தார். உயிர்நிழல் ஊடாக, மானிடர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள், தமிழ் சமுதாயத்திஙள் நிலவும் முரண்பாடுகள், தேசிய ஒடுக்குமுறைகள் தொடர்பான புதிய கேள்விகளை, தமது சகாக்களுடன் சேர்ந்து எழுப்பியிருந்தார். மாக்சியத்தின்பால் அதீத நம்பிக்கை கொண்ட இவர், பின் நவீனத்துவம், அமைப்பியல் பற்றியும் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

பாரிசில் உயிர்த்துடிப்புடன் செயற்பட்ட சில உன்னதமான மனிதர்களை அண்மைக்காலங்களில் நாம் இழந்திருக்கின்றோம். சபாலிங்கம் அவர்கள் பாசிசத்திற்குப் பலியானார். உமாகாந்தன் அவர்கள் வாழ்வியல் சமூக நெருக்கடிகளில் போராடி, குறைந்த வயதிலேயே மறைந்தார். தற்போது நாம், தோழர் கலைச்செல்வன் அவர்களை இழந்திருக்கின்றோம். அவருடன் சம காலத்தில் ஒன்றாக வாழ்ந்த தோழர்கள், நண்பர்கள் ஆகிய எங்களுக்கு அவருடைய இழப்பு, பாரிய வெறுமையைத் தோற்றுவித்துள்ளது.

அவரின் பிரிவால் வாடும், அவரின் மனைவி, மற்றும் குடும்பத்தார், நண்பர்கள், தோழர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தோழர் கலைச்செல்வன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்**

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா**
**(EPRLF-P)**

www.tamilarangam.net

# எங்கள் கலைச்செல்வன்

சிறகிலிருந்து
பிரிந்த இறகொன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச்செல்கிறது
- பிரேமிள்



28. 03. 1960 - 05. 3. 2005

## இறுதி அஞ்சலி

**14. 03. 2005**
**திங்கட்கிழமை**

Crématorium du Père Lachaise
16, Rue du Repos - 75020 PARIS
**Métro : GAMBETTA**

காலை 9.30 லிருந்து பகல் 12.30 மணிவரை
: அஞ்சலி

பகல் 12.30 லிருந்து பிற்பகல் 2.30 வரை
: இரங்கலுரை

பிற்பகல் 2.30 மணி
: இறுதி விடைபெறல்


13.03.2005 ஞாயிறுவரை பிற்பகல் 4.00 மணியிலிருந்து 5.00மணிக்குள்
'Funéraium du Mont Valérien' 42, Chemin des Cendres - 92000 Nanterre
என்னும் முகவரியில் பார்வையிடலாம். RER : Nanterre Ville Bus: 141, 359

தொடர்புகளுக்கு : 0149 97 89 83 / 06 21 74 58 26
01 60 60 84 88 / 06 64 29 51 23 / 06 09 09 59 67

தகவல் : நண்பர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலைச்செல்வனின் என் நினைவுகள்.........

செல்வங்களில் பெரும்
செல்வங்களாம்
கலைச்செல்வங்கள்
அக் கலைச் செல்வங்களை காணா
தேடி, ஓடி, நாடி
ரசித்த நாட்களில்
கலைகளின் செல்வன்
உன்னை கண்டேன்

உன்னில் உன் உள்ளத்தில்
உருகி கொண்ட
ஒரு அன்பை கண்டேன்
என்னை கண்ட போதெல்லாம்
முகமலர்ந்து கைகுலுக்கி, கைகூப்பி
கவியே, கவிக்குயிலென
செல்லமாக சொல்லி செல்வாய்
நானும் செல்லமாக சிரித்து செல்வேன்
இலக்கிய விமர்சனங்களுடனும்
உன்னை சந்தித்தேன்
சிலவேளை தட்டிக் கொடுப்பாய்
சிலவேளை முட்டியும் கொள்வாய்
உன் வீண்பு வாதங்களாலும்
நொந்து கொண்டு
வந்து கண்ட
கவிதை பல கண்டு கழிப்புற்றேன்
இவையே எனக்கு உன்னில்
பிடித்தவை

உனக்கு பிடிக்காதவைகளை
உடனே உரைத்திடுவாய்
எனக்கு பிடிக்காதவைகளை
உன்னிடம் மோதிடுவேன்
அவையறிவு சம்பந்தமானவை
அவை அன்பு சம்பந்தமானவை
அறிந்து அன்பு கொண்டேன்

என்றும்
சிரிக்க தெரிந்தவனே
சிரித்து கொண்டேயிருப்பாய்
உயிர்களில் சிரிக்க தெரிந்த
உயிர் மனித உயிர் என்பதை
உன்னில் உறுதிப்படுத்தினவனே

மனித மனங்களை நேசித்தவனே
மனிதர்களும் மனிதமும் மண்ணில்
வாழ எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும்
நடிப்பிலும் உன்னை காட்டியவனே

இன்று! உன் மரண செய்தி கேட்டு
மனமுடைந்து, மனம்நொந்தேன்
எதற்கு,மரணம் உன்னை தேடி வந்தது
இதற்கு பெயரா?
இந்த இழிந்த வாழ்வு
அழிந்த வாழ்வு விழிந்தேன்

உன்னோடு பல விதமாய்
கருத்து மோத
கட்டி வைத்தேன் பல கருவை
காத்திருந்தேன்
உன் வரவை
இவையெல்லாம் மூடிவிட்டு
ஓடிவிட்டாய் இந்த
பொல்லாத உலகை விட்டு

உன்னை உன் எண்ணத்தை
தெரிந்தவர் புரிந்தவர் யாருமில்லையோ
அறியேன், தெரியேன்
எதை தெரிந்தார்களே
எதை புரிந்தார்களோ
உன் நண்பர்கள் அன்பர்கள்
அதையும் அறியேன் யான்
ஒன்று மட்டும் புரிந்தேன்
உன் சிரிப்பை மட்டும் புரிந்தேன்
ஏனெனில் சிரிக்க மட்டுமே
பிறந்தவர்கள் யாம்
சிரித்துவிட்டு போகின்றாய்
சிந்திக்கின்றேன்
சிந்துகின்றேன்
ஒரு துளி கண்ணீர் உனக்காக
இதுவே எமது நிரந்தரப் பயணம்
நினைக்கின்றேன்

- ஜெயா பத்மநாதன் -
பிரான்ஸ்

www.tamilarangam.net

# கண்ணீர் அஞ்சலி

மனதை உலுக்கும் மரணச் செய்தியாய் நண்பன் கலைச்செல்வன் எழுதப்பட்டுவிட்டான். 45 வயதேயான, வாழ்வின் நடுப் பகுதியைத் தொட்டிருந்தபோது இவன் காவுகொள்ளப்பட்டுவிட்டான். சிரித்த முகம், கலகலப்பான பேச்சு, அரவணைப்பு எல்லாம் அவனது குறும்தாடியை இழக்க மறுத்த முகத்தையும் தாண்டி வந்து அவனது தோற்றத்தை எம் நினைவில் எழுதிச்செல்லும்.

புலம்பெயர் வாழ்வின் ஆரம்பகாலங்களில் அதாவது 80 களின் ஆரம்பங்களிலிருந்தே இலக்கியம் அரசியல் என பணியாற்றத் தொடங்கியவர்களில் அவனும் ஒருவன். ஒரு கவிஞனாக நடிகனாக விமர்சகனாக செயற்பாட்டாளனாக அவன் பல முகங்களைக் காட்டியவன். எக்சில் சஞ்சிகையின் ஆரம்பகாலத் தோற்றத்துக்குக் காரணமானவர்களில் ஒருவனாக இருந்து பின் உயிர்நிழல் சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவனாக தனது உழைப்பைத் தொடர்ந்துகொண்டேயிருந்தான். பாரீசில் வெளிவந்த முழுநீளத் திரைப்படமான 'முகம்' படத்தில் முக்கிய பாத்திரத்தில் வந்து தன்னில் நடிப்பாற்றல் புதைந்திருப்பதை வெளிப்படுத்திக் காட்டினான். புகலிடத்தின் இலக்கியச் சந்திப்புகளில் ஆர்வமுடன் காணப்பட்ட அவன் பரிசில் சந்திப்புகளை நடத்துவதிலும் முன்னின்றான்.

## கலைச்செல்வனின் மரணச்செய்தி



28.03.1960 - 05.03.2005

தமது வலுவுக்கு எட்டியளவு தமது உழைப்பையெல்லாம் கரைத்து அவனும் அவன் துணைவி லக்சுமியும் உயிர்நிழல் சஞ்சிகையையும் சில வெளியீடுகளையும் வெளிக்கொணர்ந்தார்கள். புலம்பெயர் இலக்கியத்தின் தோற்றத்தில் பன்முகக் கருத்துகளுடன் எழுத்தின் வலிமையை நிலைநாட்டிவந்த சஞ்சிகைகளில் எக்சில் உயிர்நிழல் என்பவற்றுக்கும் முக்கிய பங்குண்டு. விடாமுயற்சியோடு சொந்த உழைப்பில் அண்மைக்காலம்வரை உயிர்நிழல் சஞ்சிகையைக் கொண்டுவந்து தனது பாதையைத் தொடர்ந்துவிட்டு இன்று எம்மைவிட்டு நிரந்தரமாய் விடைபெற்றுவிட்டான்.

நம்பமுடியவில்லை. எம் நினைவில் அவன் மரணத்தை இருத்தமுடியவில்லைத்தான். ஆனாலும் நம்பித்தான் ஆகவேண்டும் என்றானபோது எழுகிறதே வலி, இங்கு அவன் எம்முடனே வாழ்ந்துகொள்கிறான். திரட்சியான அனுபவங்களுடனும் பின்னணிபாடா அரசியலுடனும் அவன் எம்மில் இணைந்துகொண்டதால் மெல்ல நெளிகிறதே ஒரு கனம், இங்கு அவன் எம்முடனே வாழ்ந்து கொள்கிறான். அவன் வாழ்ந்துகொள்வான் எம்முடன். துணைவியாக ஒரு நண்பியாக தோழியாக அவனுடன் வாழ்ந்த லக்சுமிக்கும் மகன் கபிலனுக்கும், அவனது தாய்க்கும் சகோதரங்களுக்கும் மற்றும் உறவினர் நண்பர்களுக்கும் எமது கரங்களின் மெல்லப் பற்றுதலாய்... அவர்தம் துயருள் எம் இணைவாய்...

துயருறு பொழுதுடன் நாம்
சுவிஸ் நண்பர்கள்



www.tamilarangam.net

# உயிரின் நிழலாய்



அன்னை மடியில்
28-03-1960

மக்கள் மனதில்
05-03-2005

## தோழர். கலைச்செல்வன்

காலஞ்சென்ற எமது அன்புத் தோழர் கலைச்செல்வன் அவர்கள் 1983ற்குப் பின், புலம்பெயர்ந்து சமூகத்தின் நெருக்கடிகளுடன் தம்மைப் பிணைத்துக்கொண்டு, சமகால வரலாற்றின் குறியீடாக எம்மோடு வாழ்ந்தவர். இலக்கிய வட்டம், பெண்கள் சந்திப்பு, புலம் பெயர்ந்தவர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகள், கலைச் செயற்பாடுகள், ஜனநாயகம், மனித உரிமை, மற்றும் சகல அடக்கு முறைகளுக்கும் எதிரான உந்துதலுடன் வாழ்ந்து எம்மை விட்டு மறைந்தவர்.

முகம், உயிர்நிழல் ஆகிய கலைப்படைப்புகளினூடாக, தனது ஆன்ம உணர்வுகளை வெளிப்படுத்திய கலைச்செல்வன் அவர்களின் திடீர் மறைவு, எம்மை பெரும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. கலைஞனாக, இலக்கிய வாதியாக, சமூகவியலாளனாக, தொழிலாளியாக, புலம்பெயர்ந்த மனிதர்களின் துயரம் நிறைந்த நெருக்கடிகளுடன் தன்னைத் தொடர்புபடுத்தி வாழ்ந்தவர்.

பிரான்சில் தயாரிக்கப்பட்ட முகம் திரைப்படத்தில் என்றென்றும் மனதில் நிற்கும் அழுத்தமான முத்திரையைப் பதித்திருந்தார். உயிர்நிழல் ஊடாக, மானிடர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள், தமிழ் சமுதாயத்தினுள் நிலவும் முரண்பாடுகள், தேசிய ஒடுக்குமுறைகள் தொடர்பான புதிய கேள்விகளை, தமது சகாக்களுடன் சேர்ந்து எழுப்பியிருந்தார். மாக்சியத்தின்பால் அதீத நம்பிக்கை கொண்ட இவர், பின் நவீனத்துவம், அமைப்பியல் பற்றியும் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

பாரிசில் உயிர்த்துடிப்புடன் செயற்பட்ட சில உன்னதமான மனிதர்களை அண்மைக்காலங்களில் நாம் இழந்திருக்கின்றோம். சபாலிங்கம் அவர்கள் பாசிசத்திற்குப் பலியானார். உமாகாந்தன் அவர்கள் வாழ்வியல் சமூக நெருக்கடிகளில் போராடி, குறைந்த வயதிலேயே மறைந்தார். தற்போது நாம், தோழர் கலைச்செல்வன் அவர்களை இழந்திருக்கின்றோம். அவருடன் சம காலத்தில் ஒன்றாக வாழ்ந்த தோழர்கள், நண்பர்கள் ஆகிய எங்களுக்கு அவருடைய இழப்பு, பாரிய வெறுமையைத் தோற்றுவித்துள்ளது.

அவரின் பிரிவால் வாடும், அவரின் மனைவி, மற்றும் குடும்பத்தார், நண்பர்கள், தோழர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தோழர் கலைச்செல்வன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்**

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா**
**(EPRLF-P)**